**செய்தி வெளியீடு எண்: 252** **நாள்: 03.04.2020**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

கொரோனா வைரஸ் தாக்குதலை தடுக்கும் வகையில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. இச்சூழ்நிலையில் முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் கட்டணம் இல்லா உதவி எண்கள் அறிவிக்கப்பட்டு **27.03.2020** தேதியில் இருந்து செயல்பட்டு வருகிறது. எனவே, முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் **18004250111** என்ற எண்ணை தங்கள் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கேட்கும் மற்றும் பேசும் திறன் அற்றவர்களுக்கு காணொலி மூலம் சைகை மொழியில் (sign language) தங்களது தேவைகளை தெரிவிக்க **9700799993** என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்விரண்டு எண்களும் **24/7** நேரமும் செயல்படும்.

மேலும், கொரோனா நோய்த்தொற்று குறித்த ஆலோசனைகளை முதியவர்களுக்கு அளிக்கும் வகையில் காலை **10.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை ஆலோசனை மையம் செயல்படும். இந்த ஆலோசனை மையத்தை தொடர்பு கொள்ள கீழ்க்காணும் இரண்டு எண்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**044–28590804**

**044–28599188**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**